மாண்புமிகு அமைச்சரவர்கள் திருத்திய மதிப்பீடு எவ்வளவு என்றும், அதில் கூடுதல் நிதி உதவி எவ்வளவு என்றும், அதில் எப்பொழுது வேலைகள் துவங்கப்பட்டு அங்கே மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அறிவிப்பார்களா எனப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருத்திய மதிப்பீடுகள் மட்டும் இதிலே முக்கியமான ஒன்றாக இல்லை. திருத்திய மதிப்பீடுகள் பெற்றாலும், இந்த *120* உறுப்பினர்களைக் கொண்டு, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கமாகத் துவக்க வேண்டும். அதைப் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கமாகத் துவக்கினால்தான் இந்தக் கட்டிடம் கட்டுவதற்கும், பிரதம விசைத்தறி நெசவாளர்களுக்கு எல்லாவிதமான உதவிகள் வழங்குவதற்கும், அங்கே மின்னிணைப்பு, சாலைப் போக்குவரத்து போன்ற அத்தியாவசிய வசதிகள் இப்பொழுது இல்லாததால், அவற்றையெல்லாம் அளிப்பதற்கும் இந்த *120* உறுப்பினர்களும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே சேர்வதற்கு மறுப்பு தெரிவிக்காமல் சேர வேண்டும். அவர்கள் இப்பொழுது மறுப்பு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினரவர்கள் அவர்கள் மறுப்பு தெரிவிக்காத சூழ்நிலையை அங்கே உருவாக்குவார் என்று சொன்னால் திருத்திய மதிப்பீட்டைப்பற்றிக் கவலை இல்லை; உடனடியாகப் பணிகள் துவங்கப்படுவதற்கு ஆணையிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக குழுவின் நூற்று எழுபத்து இரண்டாவது, நூற்று எழுபத்து மூன்றாவது, நூற்று எழுபத்து நான்காவது, நூற்று எழுபத்தைந்தாவது ஆகிய நான்கு அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.